திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி, ஊத்துக்கோட்டை பேரூராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் முகாமை துவக்கி வைத்து மக்களின் கோரிக்கை மனுக்களை பதிவு செய்யும் செயல்முறையை நேரில் பார்வையிட்டு மனுதார்களுடன் நேரடியாக உரையாடி துறை சார்ந்த அதிகாரிகளுடன் இணைந்து அவர்களின் தேவைகளுக்கு உடனடி தீர்வு வழங்குமாறு முன்னாள் மாவட்ட செயலாளர் தலைமை செயற்குழு உறுப்பினர் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன்; வேண்டுகோள் விடுத்தார். உடன் எஸ்.ரமேஷ், அப்துல் ரஷீத், மு.பாஸ்கர், எம்.கேசவன், சம்சுதின், கோல்டு மணி, சீனிவாசன், ரஹீம், கே.வி.நாகராஜ், தமிழ்செல்வம், வி. கோகுல்கிருஷ்ணன், கோ.விஜியன், கே.பாபு, பி.ஜீவா, திலிப், நெடுஞ்செழியன், வெங்கடேசன், நரேஷ், டில்லிபாபு, அருண், எஸ்.என். சாய்குமார், டி.கே.பாபு, பாருக், சித்ராபாபு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

சென்னை மேற்கு மாவட்டக் கழக ஆலோசனை கூட்டம் நேற்று மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டசெயலாளர் நே.சிற்றரசு அவர்கள் SIR நடவடிக்கையை கண்டித்து வரும் 11.11.2025 அன்று மதசார்பற்ற கூட்டணி சார்பில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டம் குறித்தும், வள்ளுவர் கோட்டத்தில் நடைபெறும் முற்போக்கு புத்தக கண்காட்சி – 2025 மற்றும் கழக இரு வண்ணக்கொடிக்கு வயது 75 ஆகியவற்றினை விளக்கி பேசினார். கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.கே.மோகன், நா. எழிலன், தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட / மாநில நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் வட்டக் கழக செயலாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

எஸ்.ஐ.ஆர்.ரைக் கண்டித்து திருவள்ளூரில் நடைபெற உள்ள கண்டன ஆர்ப்பாட்டம் குறித்து

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி - தி.மு.க. நிர்வாகிகளுடன் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. அறிக்கை!

திருவள்ளூர், நவ. 8

தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.) கொண்டு வந்துள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் வருகிற 11-ஆம் தேதி அன்று அனைத்து மாவட்டத் தலை நகரங்களிலும் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறும் என்று மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சித் தலைவர்கள் அறிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில் தமிழ் நாடு முதல்வர் கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி திருவள்ளூர் ரயில் நிலைய அருகில் வருகின்ற 11-ஆம் தேதி அன்று நடைபெற உள்ள மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் பணிகள் குறித்து நாளை (09.11.2025 ஞாயிற்றுக்கிழமை) மாலை 4 மணி அளவில் திருவள்ளூரில் உள்ள சாந்தி திருமண மண்டபத்தில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளை சேர்ந்த தலைவர்கள் செயலாளர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளை சேர்ந்த மாவட்ட ஒன்றிய நகர பேரூர் தலைவர்கள் செயலாளர்கள் மற்றும் திராவிட முன்னேற்ற கழகத்தை சேர்ந்த திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மட்டும் கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துக் கொண்டார்.

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. இலக்கிய அணி துணை அமைப்பாளர் – மறைந்த

எம்.ஆர்.வெங்கடேசன் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்குகிறார்!

சென்னை, நவ.8-

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. இலக்கிய அணி துணை அமைப்பாளரும், கழக மூத்த முன்னோடியுமான மறைந்த எம்.ஆர்.வெங்கடேசன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்வும் - இந்நாளையொட்டி அன்னதானம் வழங்கும் விழாவும் இன்று (8.11.2025 - சனிக்கிழமை) பகல் 12.00 மணி அளவில் சென்னை -12,

குயப்பேட்டை, 44.1 சின்னத்தம்பி தெரு எனும் முகவரியில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வுக்கு - எழும்பூர் வடக்குப் பகுதி விளையாட்டு மேம்பாட்டு அணியின் துணை அமைப்பாளர் எம்.ஆர்.வி.ஆர்.பரத் தலைமை வகிக்கிறார்.

எழும்பூர் வடக்குப் பகுதிச் செயலாளர் சொ.வேலு முன்னிலை வகிக்கிறார்.

சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு, இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, அன்னதானம் வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் பி.எம். யாழினி, புலவர் சாமி நாகப்பன், கோ.ஏகப்பன், புரசை கோ.மணி, வட்டச் செயலாளர்கள் சு.மனோகர், ந.பாலு, தி.தயாளன், வி.அபாய், கி.சேகர், ஆர். எம்.ரங்கநாதன் உள்பட பலரும் கலந்துகொள்கின்றனர்.

எம்.ஆர்.வி.ராஜேந்திரன் நன்றி கூறுகிறார்.

இந்நிகழ்ச்சிக்கு எம். ஆர்.வெங்கடேசன் குடும்பத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில்

ஊராட்சிகள்தோறும் பாகம் வாரியாக ஆய்வுக் கூட்டம்!

ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் அறிவிப்பு!

காஞ்சிபுரம், நவ. 8-

குன்றத்தூர்தெற்குஒன்றியக் கழகச் செயலாளர் படப்பை ஆ. மனோகரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திருப்பெரும்புதூர்சட்டமன்ற தொகுதி, குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்துக்குட்பட்டஊராட்சிகள்தோறும் பாக வாரியாக ஆய்வுக் கூட்டம்அமைச்சர்தா.மோ.அன்பரசன் ஆலோசனைக்கிணங்க, இன்று (08.11.2025 -சனிக்கிழமை) எனது (படப்பை ஆ. மனோகரன்) தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில்திரும்பெரும்புதூர் சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் - கழக வர்த்தக அணி துணைச்செயலாளர் கே.ஜி. பாஸ்கர் சுந்தரம் ஆய்வு மேற்கொள்கிறார்.

அதே சமயம் மாவட்ட ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள், கிளைக்கழக நிர்வாகிகள்,அணிகளின்நிர்வாகிகள், வாக்குச்சாவடிநிலைமுகவர் (பி.எல்.ஏ.-2) , வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழுவினர்கள் (பி.எல்.சி.) வாக்குச் சாவடி இமுகவர்கள் (பி.டி.ஏ.) அனைவரும் பங்கேற்றிடும்வகையில்இக்கூட்டத்தினை சிறப்பாக நடத்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டம் நடைபெறும் தேதி, நேரம், இடம், ஊராட்சி, பாகம் எண், ஒருங்கிணைப்பாளர்கள் விவரம் வருமாறு:

08.11.2025-காலை9மணி - ஆர்.கே. மஹால், மணிமங்கலம்-கரசங்கால்- 263, 264, 265, 266, மலைப்பட்டு-275, சேத்துப்பட்டு-276-நா.ஜெகதீசன், (மாணவர் அணி துணை அமைப்பாளர்.) மணிமங்கலம் - 267, 268,269,270,271,272,273, 274-திருமதி. குமுதாசுமன் (குன்றத்தூர்தெற்குஒன்றிய பொறுப்புக்குழு உறுப்பினர், கிளைசெயலாளர்மணிமங்கலம்)

08.11.2025 - காலை 9.30 மணி-கிரவுன் பேலஸ் திருமணமண்டபம்ஆதனூர்-ஆதனூர் 343, 344, 345, 346, 347, 348,349, 350, 357, 358-என்.எஸ்.இளங்கோ (மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர்)

08.11.2025 - காலை 10 மணி-ஸ்ரீலட்சுமிநாராயண திருமணமண்டபம், மாடம்பாக்கம்-காவனூர், 355, 356, மாடம்பாக்கம், 359, 360, 361, 362, 363, 364, 365, 366, 367 -ரா.தீபக், (ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்.)

08.11.2025 - காலை 11 மணி -சமுதாய நலக்கூடம், நாட்டரசன்பட்டு-செரப்பணஞ்சேரி313, 314, 315, 316, 317, 318, வைப்பூர் 319, 320 ,321, சி.பார்த்தசாரதி (குன்றத்தூர்தெற்குஒன்றியகழக பொருளாளர்) எழிச்சூர்-302, 303, வடக்குப்பட்டு-304, 305, நாட்டரசன்பட்டு -306, 307- அ.ஐமீர் (ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர்) வட்டம் பாக்கம்-308, 310, வளையக்கரணை-309, சென்னக்குப்பம்- 311, 312 -வ.நந்தகோபால் (குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக துணைச் செயலாளர்)

08.11.2025 - மாலை 04.00-சமுதாய நலக்கூடம், சாலமங்கலம்-சாலமங்கலம் -326, 327, 328, 329, 330, ஒரத்தூர்-351, 352, 353, 354 - செல்வி.வே.சங்கீதா (மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்.)

08.11.2025 - மாலை 5 - சி.என்.சி. மஹால், படப்பை- படப்பை - 331, 332, 333, 334, 335, 336, 337, 338 - எஸ்.கர்ணன் (மாவட்டநெசவாளர்அணி அமைப்பாளர்,) படப்பை 322, 323, 324, 325, 339, 340, 341, 342-க.பா.ஆடலரசு (ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்)

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

கோடம்பாக்கம் மண்டலம், அசோக் நகரில்

"நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட மருத்துவ முகாம்!

சென்னை, நவ.8-

கோடம்பாக்கம் மண்டலம், அசோக் நகர், டாக்டர் கே.கே.நிர்மலா பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் இன்று (08.11.2025 சனிக்கிழமை) "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட முகாம் எட்டாவது கட்டமாக நடைபெறவுள்ளது. இந்த மருத்துவ முகாம் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும்.

இந்த மருத்துவ முகாமில் பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, எலும்பியல் மருத்துவம், மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவம், குழந்தை மருத்துவம், இருதயவியல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை மருத்துவம், மனநல மருத்துவம், இயன்முறை மருத்துவம், நுரையீரல் மருத்துவம், இந்திய முறை மருத்துவம், சர்க்கரை நோய் மருத்துவம் மற்றும் ஸ்கேன் பரிசோதனை ஆகிய 17 துறைசார் நிபுணர்களின் மருத்துவ ஆலோசனைகள், அடிப்படை மற்றும் உயர்நிலை மருத்துவப் பரிசோதனை, முழுமையான உடல் ஆரோக்கிய பரிசோதனை, காசநோய், தொழுநோய் பரிசோதனை, ஆரம்ப புற்றுநோய் கண்டறியும் பரிசோதனை ஆகிய மருத்துவ சேவைகள் வழங்கப்படுகிறது.

மேலும், முதலமைச்சரின் விரிவாக மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பதிவு செய்தல், மாற்றுத்திறனாளிகளுக்கான அரசு அங்கீகார சான்றிதழ் வழங்குதல், அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு தொழிலாளர் நல வாரியத்தின் உறுப்பினர் அடையாள அட்டை வழங்குதல், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஊட்டச்சத்து விழிப்புணர்வு பிரச்சாரம் போன்ற இணைச் சேவைகளும் வழங்கப்படுகிறது.

கோடம்பாக்கம் மண்டலம், அசோக் நகர், டாக்டர் கே.கே. நிர்மலா பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் இன்று (08.11.2025) நடைபெறவுள்ள "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட மருத்துவ முகாமில் பொது மக்கள் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

சென்னைக் குடிநீர் வாரியம் சார்பில் குறை தீர்க்கும் கூட்டம்!

சென்னை.நவ.8-

சென்னைக் குடிநீர் வாரிய குறை தீர்க்கும் கூட்டம் இன்று (08.11.2025 சனிக்கிழமை) குடிநீர் வாரிய 15 பகுதி அலுவலகங்களில் நடைபெறும்.

சென்னைக் குடிநீர் வாரியம் சார்பில், குறை தீர்க்கும் கூட்டங்கள் இரண்டாவது சனிக்கிழமைகளில் நடத்தப்பட்டு வருகிறது. இம்மாதத்திற்கான குறை தீர்க்கும் கூட்டம் 08.11.2025 (சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை குடிநீர் வாரிய அனைத்து பகுதி அலுவலகங்களில் நடைபெறும்.

இந்த குறை தீர்க்கும் கூட்டம் நடைபெறும் பகுதி அலுவலகங்கள் விபரம்:

பகுதி அலுவலகம்-1 - திருவொற்றியூர், பகுதி அலுவலகம்-2 - மணலி, பகுதி அலுவலகம்-3 - மாதவரம்.பகுதிஅலுவலகம்- 4 - தண்டையார்பேட்டை, பகுதி அலுவலகம்-5 - இராயபுரம், பகுதி அலுவலகம்-6 - திரு.வி.க.நகர், பகுதி அலுவலகம்-7 - அம்பத்தூர், பகுதி அலுவலகம்-8 - அண்ணா நகர், பகுதி அலுவலகம்-9 - தேனாம்பேட்டை, பகுதி அலுவலகம்-10 - கோடம்பாக்கம், பகுதி அலுவலகம்-11 - வளசரவாக்கம், பகுதி அலுவலகம்-12 - ஆலந்தூர், பகுதி அலுவலகம்-13 - அடையாறு, பகுதி அலுவலகம்-14 - பெருங்குடி, பகுதி அலுவலகம்-15 - சோழிங்கநல்லூர்.

இந்த குறை தீர்க்கும் கூட்டங்கள் வாயிலாக பொதுமக்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு பகுதி அலுவலகங்களிலும் ஒரு மேற்பார்வைப் பொறியாளர் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும். எனவே, இந்த குறை தீர்க்கும் கூட்டத்தில் பொதுமக்கள் பங்கேற்று குடிநீர், கழிவுநீர் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள், குடிநீர், கழிவுநீர் வரி மற்றும் கட்டணங்கள், நிலுவையில் உள்ள குடிநீர், கழிவுநீர் புதிய இணைப்புகள் தொடர்பான சந்தேகங்களை நேரில் மனுக்கள் வாயிலாக தெரிவித்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், மழைநீர் சேகரிப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பான விளக்கங்களையும் இக்கூட்டத்தின் வாயிலாக தெரிந்து கொள்ளலாம்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டு உள்ளது.

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ., அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர்/பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

ஈரோடு வடக்கு மாவட்டம்

தலைவர் - எம்.ரங்கசாமி, கலைஞர் நகர், மாதம்பாளையம், பவானிசாகர், ஈரோடு மாவட்டம்.

துணைத் தலைவர் - அ.மூர்த்தி, 28, சிவசண்முகம் வீதி-1, புதுப்பாளையம், அஞ்சல், கோபி, ஈரோடு.

அமைப்பாளர் - கு.சிற்றரசு, 1, ஜெ.கே.நகர், மாதம்பாளையம், புளியம்பட்டி, ஈரோடு மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) மு.ராதாமுருகேசன், 143, இட்ரகல் புதுக்காடு, ஜி.எஸ். குடியிருப்பு, அந்தியூர், ஈரோடு மாவட்டம். 2) சி.கே. சிவாஜி, 10/24, காந்திநகர் மேல் வீதி, புளியம்பட்டி, பவானிசாகர், ஈரோடு மாவட்டம். 3) எம்.சண்முகம், 4/149, பாரதியார் வீதி, எலந்தக்காடு, சிறுவலூர், கோபி, ஈரோடு மாவட்டம். 4) பி. அண்ணாதுரை, 1/132, பனையம்பள்ளி, பவானிசாகர், ஈரோடு மாவட்டம். 5) சி. மூர்த்தி, 242, பட்டத்தரசி அம்மன் கோவில் வீதி, கோட்டுப்புள்ளாம்பாளையம், கோபி, ஈரோடு மாவட்டம். 6) எஸ். தங்கராசு 1/145, சொக்குமாரிபாளையம், கெட்டிசெவியூர், நம்பியூர், ஈரோடு மாவட்டம்.

தஞ்சை வடக்கு மாவட்டம்

கும்பகோணம் மாநகரம்

அமைப்பாளர் - வி.எஸ். கருணாகரன் 1156, ஆணைக்காரன் பாளையம், புதுத் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) எம். செல்வராஜ் 7இ, கிழக்கு பட்டகால் தெரு, கணபதி நகர், பெருமாண்டி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 2) மயிலுகார்த்தி (எ) ஆர். கார்த்திக் சி.7, நாகேஸ்வரன் தெற்கு வீதி, குடிசை மாற்று வாரியம் கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 3) க. கல்யாணசுந்தரம் 19ஏ, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், மேலக்காவேரி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 4) கா. செந்தில்குமார் 31, ஆணைக்காரன் பாளையத் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை – 18
நாள்: 7–11–2025.

ஆ. கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ.,
செயலாளர்,
தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

சென்னை தெற்கு மாவட்டம், 175வது வட்ட கழக பொருளாளர் இ.தணிகைவேல் அவர்களின் தந்தை நெசவாளர் அணி சென்னை தெற்கு மாவட்ட தலைவர் கெ.எல்லப்பன் அவர்கள் கலைஞர் நூற்றாண்டு மருத்துவமனையில் உடல் நலக்குறைவால் மருத்துவ சிகிச்சையில் இருப்பதை அறிந்து வேளச்சேரி மேற்கு பகுதி சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணை அமைப்பாளர் டாக்டர் எஸ். நஜீம் நேரில் சென்று நலம் விசாரித்து நிதி உதவி வழங்கினார்.உடன் 175 வட்ட பகுதி பிரதிநிதி உ.சிவா உள்ளிட்ட கழகத்தினர் இருந்தனர்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக, பொன்னேரி நகர வார்டு இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் நேர்காணல் நடைபெற்றது. மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் ஆலோசனையின் பேரில் நகர இளைஞர் அணி அமைப்பாளர் மா.தீபன் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாநில இளைஞரணி துணை செயலாளர் ராஜா மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் லோகேஷ் ஆகியோர் கலந்து கொண்டு நேர்காணல் நடத்தினர். என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி தொடர்பாக கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனைக் கூட்டமும் நடைபெற்றது. உடன் நகர செயலாளர் ரவிக்குமார்,நகர மன்ற தலைவர் டாக்டர் பரிமளம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி

மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா,எம்.எல்.ஏ., அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணியின் மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

ஈரோடு வடக்கு மாவட்டம்

தலைவர் - கே.கே.பழனிச்சாமி, 4/475, சாய் அருள் நிவாஸ், கரட்டடிபாளையம், கோபி.

துணைத் தலைவர் - டி.பாஸ்கரன், 62/1, பிள்ளையார் கோவில் வீதி, புள்ளப்பநாயக்கன்பாளையம், டி.என்.பாளையம்(வழி) கோபி.

அமைப்பாளர் - நா.ரங்கராஜ், பெரிய கள்ளிப்பட்டி, பவானிசாகர்.

துணை அமைப்பாளர்கள் - 1) எம்.கே.செல்வராஜ், செண்பகபுதூர், சத்தி. 2) டி.எம்.சிவராஜ், 116, குமரன் கோவில் வீதி, டி.என்.பாளையம், 3) வே.கணேசன், குழவிக்கரடு, வெள்ளாளபாளையம், கோபி. 4) ஏ.ஈஸ்வரமூர்த்தி, கிழக்கு தோட்டம், உத்தண்டியூர், பவானிசாகர். 5) க.ந.நாச்சிமுத்து, 4/7, கல்லூரி சாலை, கரட்டடிபாளையம் (அ), லக்கம்பட்டி, கோபி. 6) பி.ரங்கசாமி, கிழக்கு வீதி, கே.என்.பாளையம், சத்தி. 7) கே.சக்தி (எ) சண்முகம், 43, வேடர் வீதி, நம்பியூர்.

கரூர் மாவட்டம்

கரூர் மாநகரம்

அமைப்பாளர் - கே.பன்னீர் (எ) முத்துசாமி, 12/70, காவேரியம்மாள் தோப்பு, கரூர் அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் மாவட்டம் - 639001

துணை அமைப்பாளர்கள் - 1) பி. ராதாகிருஷ்ணன், 73/2, தாந்தோணி குடித் தெரு, திருமாநிலையூர், கரூர் தாலுக்கா, கரூர் மாவட்டம் - 639001 2) ஆ.வாசுதேவன், 9/1 - வி.வி.ஜி நகர், 2வது கிராஸ், வெங்கமேடு அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் மாவட்டம் - 639006 3) பி.மலையப்பன், 47/1சி, பெரியசாமி நகர், பசுபதி லே அவுட், கரூர் அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் மாவட்டம் - 639001 4) எ.கதிரேசன், 185சி, தில்லை நகர் 2வது கிராஸ், விவிஜி நகர், வெங்கமேடு, கரூர் மாவட்டம் - 639006 5) எஸ். சம்பத்குமார் 32/2, சேர்மன் ராமானுஜம் தெரு, கரூர் அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் மாவட்டம் - 639001 6) டி. கோபால், 1/3, வெள்ளகவுண்டன் நகர் 6வது கிராஸ், ராயனூர், தாந்தோணிமலை அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் மாவட்டம் : 639004

திருப்பூர் மத்திய மாவட்டம்

திருப்பூர் தெற்கு மாநகரம்

திருப்பூர் மத்திய மாவட்டம், திருப்பூர் தெற்கு மாநகர விவசாயத் தொழிலாளர் அணி அமைப்பாளராக பணியாற்றி வந்த செங்கபள்ளி சுப்பிரமணியன் அவர்கள் திருப்பூர் மத்திய மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்டதால் அவருக்குப் பதிலாக **சு. சுரேஷ்குமார்** (5/388, ஓம் நமோ நாராயணா நகர், பொல்லிகாளிபாளையம், திருப்பூர் - 641665) அவர்கள் திருப்பூர் தெற்கு மாநகர விவசாயத் தொழிலாளர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை – 18
நாள்: 7–11–2025.

அன்னியூர் சிவா, எம்.எல்.ஏ.,
செயலாளர்,
தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி

மாதவரம் சட்டமன்றத் தொகுதி தெற்கு பகுதி 30 அ வட்டத்தில் பாகம் எண் 128 செகரட்டரி ஏட்காலனி லட்சுமிபுரம் பகுதியில் S.I.R வாக்காளர்களை கணக்கிட்டு படிவத்தை சட்டமன்றத் தொகுதி உதவி தேர்தல் முகவர் பொதுமக்களிடம் வழங்கப்பட்டது. அதுபோது உடன் வட்டக் கழக செயலாளர் டி.சுந்தரம், பி.எல்ஓ.பி. எஸ்என்எல் குமார், பேச்சியம்மாள், தபு தேவராஜ், கவி பிரியா, செண்பகராஜ், பி.வி. ராஜு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.